IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No.123 /2015
Deposition of witness for PW1

Name : ஜானகிராமன்

Father's Name : தனஜ்கோடி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 22 day of February, 2021.

குறுக்கு விசாரணை

நான் செல்போன் கடை நடத்தி வருகிறேன். பிரதிவாதி எனது உறவினர். அவர் பக்கத்து தெருவில் வசித்து வருகிறார். பணம் வாங்கும்போது எனது தெருவிலேயே வசித்து வந்தார். தாவா சொத்து பிரதிவாதிக்கு பட்டாபடி சொந்தமான சொத்து. தாவா சொத்தை பொறுத்து 18.10.2013 அன்றுகிரைய உடன்படிக்கை எழுதிகொண்டோம். அதன் படி பிரதிவாதிகு நான் பத்தாயிரம் ரூபாயக் கிரைய பாக்கித்தொகை தரவேண்டியிருந்தது. நான் கிரைய ஒப்பந்தப்படி எனது பகுதியை நிறைவேற்றத்தவறிவிட்டேன் என்றால் சரியல்ல. கிரைய பாக்கித்தொகை ரூபாய் பத்தாயிரத்தை பிரதிவாதியிடம் செலுத்தி கிரைய ஆவணம் எழுதி பெற நடவடிக்கை எடுத்தமைக்கு நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தவிர வேறு ஆவணங்கள் எதுவும் இல்லை. கிரைய பாக்கித்தொகை ரூபாய் பத்தாயிரத்தை பிரதிவாதியிடம் செலுத்தி கிரைய ஆவணம் எழுதி பெற நான் ஒதுபோதும் தயாராக இல்லை என்றால் சரியல்ல. நேரிடையாக பிரதிவாதியை 3 முறை அழைத்தேன். நான் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். பிரதிவாதி என்னபடித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி படிப்பறிவு இல்லாதவர் என்றால் சரியல்ல கான்ட்ராக்ட் எடுத்து வேலை செய்துவருகிறார். எனக்கும் பிரதிவாதிக்குமிடையே கொடுக்கல் வாங்கல் எதுவுமில்லை. ரூபாய் இரண்டாயிரத்து நானூறு வீதம் 8 மாதங்களுக்கு ரூ. 19,200/- வட்டியாக பிரதிவாதியிடமிருந்து பெற்றதற்கு ஆவணம் உள்ளது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு வட்டிக்குத்தான் பணம் கொடுத்தேன் என்றும், வழக்குரை சொத்தை பொறுத்து கிரைய உடன்படிக்கை செய்துகொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கும்,

பிரதிவாகதிக்குமிடையே வழக்குரை சொத்து அடைமானம் செய்தது தொடர்பாக உடன்படிக்கயே ஒழிய கிரைய உடன்படிக்கை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக எனக்கும், பிரதிவாதிக்குமிடையே கிரைய உடன்படிக்கை எதுவும் ஏற்படவில்லை என்றும், அடைமானம் சம்மந்தமாக கடன் பரிவர்த்தனை தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு படிப்பறிவு இல்லாததை பயன்படுத்தபிரதிவாதியை ஏமாற்றி கடன் கொடுத்துவிட்டு கிரைய உடன்படிக்கையாக பதிவு செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியுடன் கிரைய உடன்படிக்கை மட்டுந்தான் செய்துகொண்டேன். வட்டிக்காக கடன் கொடுக்கவில்லை. நான் 18.10.2013 யிட்ட கிரைய உடன்படிக்கைப்பற்றி வழக்குரையில் வழக்குமூலத்தை பற்றி மட்டும் குறிப்பிட்டுள்ளேன் என்றும் வழக்குரையில் வேறு எங்கும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. கிரைய பாக்கித்தொகை ரூ.10,000- ஐ பிரதிவாதியிடம் செலுத்துவதற்கு நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தயாராக இருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கிரைய பாக்கித்தொகையை ஜுலை மாதத்தில் செலுத்தி நீதிமன்றத்தில் தாக்கல செய்துள்ளேன். நான் கிரைய ஒப்பந்தப்படி எனது பகுதியை நிறைவேற்றத் தயாராகவும், விருப்பமாகவும் இருந்த விவரத்தை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யாததால் வழக்கு நிலைக்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு பொருண்மையற்ற வழக்கு என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்குமிடையே முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.